**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.13/2016 in CC. 236/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கருணாநிதி | Prosecution | P.W-3, L.W-7 |
| Father Name | காளிமுத்து | Defence | |
| Village | வடக்குத்தெரு | Taluk | சீர்காழீ |
| Calling | | Religion | |
| Age | 52/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **10.09.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா1,2 யும் எனக்கு தெரியும். இந்த வழக்கு எதிரிகளை எனக்கு தெரியாது. ஜெயராமன் மகன் ராமகிருஷ்ணனை எனக்கு தெரியும். அ.சா.1 கொடுத்த புகார் சம்மந்தமாக எனக்கு தெரியும். அ.சா.1 ன் சகோதரர் குமார் 5.5.2013 ஆம் தேதி எனக்கு போன் செய்து அ.சா.1 ன் வீட்டில் திருடுபோனதாக தகவல் சொன்னார் நான் அ.சா.1 ன் வீட்டிற்கு சென்றேன் அங்கு போலிசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். போலிசார் என்னிடமும் விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்தகையெழுத்தை சீர்காழி காவல்நிலையத்தில்வைத்து போட்டேன் அதில் திருடுபோனது சம்மந்தமாக எழுதியிருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 ன் சகோரரர் குமார் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் அ.சா.1 ன் வீட்டிற்கும் இடையே சுமார் 600 மீட்டர் இருக்கும். சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது பொதுமக்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை சம்பவ இடத்தில் விசாரித்தார்கள். காவல்நிலையத்தில் கையெழுத்து வாங்கினார்கள். என்னை எந்தபோலிசார் விசாரித்தார் என்றால் 5.5.13 அன்று பகல் 3.30 மணிக்கு போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் கையெழுத்து போட்டபேப்பரில் என்ன விபரம் என்று

எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார்தார் எனக்கு நெருக்கமான உறவினர் என்பதால் நான் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.13/2016 in CC. 236/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராமகிருஷ்ணன் | Prosecution | P.W-4, L.W-8 |
| Father Name | ஜெயராமன் | Defence | |
| Village | தெற்கு தெரு | Taluk | சீர்காழீ |
| Calling | | Religion | |
| Age | 45/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **10.09.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா1,2, 3 யும் எனக்கு தெரியும். இந்த வழக்கு எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 கொடுத்த புகார் சம்மந்தமாக எனக்கு தெரியும். அ.சா.1 ன் வீட்டில் கடந்த 5.5.2013 ஆம் தேதி பகல் 3.30 மணியளவில் திருடு போனது தொடர்பாக போலிசார் சீர்காழி போலிசார் விசாரணை செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலிசார் என்னிடமும் விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கையெழுத்தை அ.சா.1 ன் வீட்டில்வைத்துபோட்டேன். அதில் உள்ள விபரத்தை படித்துப்பார்த்தேன் தற்போது நினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 ன் சகோரரர் குமார் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் இல்லை பழக்கத்தில் மாமா என்று அழைப்பேன். எனது வீட்டிற்கும் அ.சா.1 ன் வீட்டிற்கும் இடையே சுமார் 30 வீடுகள் தள்ளி இருக்கும். நான் காலையில் வேலைக்கு சென்றுவிட்டு இரவுதான் வீட்டிற்கு வருவேன் சிலநேரங்களில் கேரளாவிற்கும் வேலைக்கு செல்வேன். சம்பவம் எனக்கு மதியம் 2.00 முதல் 2.45 மணியளவில்தான் தெரியும். சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது பொதுமக்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை சம்பவ இடத்தில் விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் என்னுடன் வேறு யாரும் கையெழுத்து போடவில்லை. என்னிடம் போலிசார் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். அதில் எழுதப்பட்டிருந்த விபரம் தெரியாது. சம்பவ இடம்

செல்லும்போது பொதுமக்கள் அதிக அளவில் இருந்தார்கள் அவர்களிடம் போலிசார் கையெழுத்து வாங்காமல் நான் புகார்தாரின் நெருங்கிய உறவினர் என்பதால் நான் கையெழுத்து பெற்றார்கள் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**